# குடல் புற்றுநோய்: ஆஸ்பிரின் சோதனை

குடல் புற்றுநோய் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதில் ஆஸ்பிரின் மாத்திரைகள் எவ்வளவு பயனளிக்கின்றன என்பதை சிங்கப்பூர் மருத்துவர்கள் ஆய்வு செய்யவுள்ளனர்.

அதற்காக ஆசியா தழுவிய பல மைய மருத்துவ சோதனையை அவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

நோயாளிக்கும் வழக்கமான ரசாயன சிகிச்சையுடன் வலிநீக்கி மருந்தான ஆஸ்பிரினையும் கொடுத்து மூன்று ஆண்டு கால சோதனையை அவர்கள் செய்யவுள்ளனர்.

இந்த ஆய்வின் மூன்றாவது கட்ட மருத்துவ ஆய்வுக்காக 2,660 நோயாளிகளைச் சேர்க்கப்படவுள்ளனர்.

அதற்காக உள்ளூர் மருத்துவமனைகள் மற்றும் இந்தியா, சீனா, பிலிப்பீன்ஸ், மலேசியா, இந்தோனீசியா நாடுகளில் உள்ள மருத்துவ நிலையங்களுடன் இணைந்து  தேசிய புற்றுநோய் மையம் செயல்படும் என்று மையம் நேற்று வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

ஆய்வில் பங்குபெறுபவர்கள் குடல் புற்றுநோயின் இரண்டாம், மூன்றாம் கட்ட நிலையில் உள்ள நோயாளிகள்.

உலகில் குடல்புற்று நோய் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று. ஆண்களை அதிகம் பாதிக்கும் உயிர்க்கொல்லி புற்றுநோயாக இது உள்ளது. மார்புப் புற்றுநோயை அடுத்து, பெண்களை அதிகம் பாதிக்கும் நோயாக குடல்புற்றுநோய் உள்ளது.

ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 2,000 புதிய குடல் புற்றுநோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர்.

எனினும் நோயாளிகளாககாஸ்பிரின் மாத்திரை உட்கொள்ள கூடாது என மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

மருத்துவ கண்காணிப்பின் கீழே குடல் புற்றுநோய்க்கு ஆஸ்பிரின் மாத்திரையை உட்கொள்ள வேண்டும்.